**Previous Examination date – 10.03.2026**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 371 of 2022**

**Deposition of Witness P.W.**

| | |
|---|---|
| **Name : திருமலைச்சாமி** | **Father/Husband's Name : திருமலைச்சாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 07.04.2026.**

**A1 to A6 present**.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தாலுகா காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் விசாரணை அதிகாரி சார்பு ஆய்வாளர் திருமதி.சாந்தி அவர்களுடன் பணிபுரிந்துள்ளேன். சார்பு ஆய்வாளர் திருமதி.சாந்தி அவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். சார்பு ஆய்வாளர் திருமதி.சாந்தி தாலுகா காவல்நிலையத்தில் கடந்த 10.05.2018ம் தேதி நிலைய பொறுப்பில் இருந்த போது பழனி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சிகிச்சையில் இருந்த நாகம்மாள் என்பவரை விசாரணை செய்து காவல்நிலைய கு.எண்.143/2018 பிரிவுகள் 147,148,294(b),323,324,506(2) இ.த.ச பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். தற்போது என்னிடம் காட்டப்படும் முதல்தகவல்அறிக்கை அவர் தயார் செய்தது தான். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.4 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சம்பவயிடம் சென்று சாட்சிகள் மாரிமுத்து, காளீஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு பார்வைமகஜர் தயார் செய்து மாதிரிவரைபடம் வரைந்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும், அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். **மாதிரிவரைபடம் அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரிகள் பழனிச்சாமி, ஆறுமுகம், கருப்புச்சாமி ஆகியோர்களை

10.05.2018ம் தேதி 12.00 மணிக்கு வண்டிவாய்க்கால் நாற்றுப்பண்ணை நர்சரி அருகே வைத்து கைது செய்து தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். பின்னர் எதிரிகள் மாசாணி, புஸ்பா, காமாட்சி ஆகியோர்களை தேடி வந்த நிலையில் மேற்படி எதிரிகள் தலைமறைவாகி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணையில் சென்றதால் எதிரிகள் கைது செய்யப்படவில்லை. பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட நாகம்மாள், மாசாணம், ஆராயி ஆகியோர்களுக்கு சிகிச்சையளித்த மருத்துவர் பிரியதர்ஷினி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **மாசாணம் என்பவரின் விபத்து பதிவேடு உ/இ காயச்சான்று அ.சா.ஆ.6 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. நாகம்மாள் விபத்து பதிவேடு உ/இ காயச்சான்று அ.சா.ஆ.7 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. ஆராயி விபத்து பதிவேடு உ/இ காயச்சான்று அ.சா.ஆ.8 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** நாகம்மாள், ஆராயி என்பவர்களுக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்றளித்துள்ளார். மாசாணம் தன்னிச்சையாக சென்றதால் காயச்சான்று குறித்து கருத்துரை இயலாது என காயச்சான்றில் தெரிவித்துள்ளார். பின்னர் காளீஸ்வரன், மாரிமுத்து ஆகியோர் முன்னிலையில் வழக்கில் எதிரிகள் பயன்படுத்திய மரக்கைப்பிடி உடைந்த அரிவாள் ஒன்று, இரும்பு அரிவாள் ஒன்று சம்பவயிடத்தில் வைத்து மேற்படி பார்வை மகஜர் அத்தாட்சி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றியுள்ளார்கள். **அத்தாட்சி அ.சா.ஆ.9 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** மரக்கைப்பிடி உடைந்த அரிவாள் ஒன்று, இரும்பு அரிவாள் ஒன்று படிவம் 91ன் மூலம் கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. **படிவம் 91 அ.சா.ஆ.10 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் மரக்கைப்பிடி உடைந்த அரிவாள் ஒன்று அ.சா.பொ.1 ஆகவும், இரும்பு அரிவாள் ஒன்று அ.சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பின்பு வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் 294(b),323,324 இ.த.சவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. நான் ஆவணத்தின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகாரை முறையாக விசாரிக்காமல் காவல்நிலையத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்து பொய்யான குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும்

இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், எதிரிகள் குற்றமற்றவர்கள் என்று சொன்னால் சரியல்ல.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.04.07 17:58:17 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.